00045

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

விசேட தேவைகள்சார் கல்வியில் சிறப்பு கல்விமாணி நிகழ்ச்சித்திட்டம் - 2023/2024

இறுதிப் பரீட்சை - 2024

மட்டம் - 06

**SNU6225/ESU4125 –** புனர்வாழ்வு மற்றும் சமூதாய அடிப்படையிலான புனர்வாழ்வும்

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 08.03.2025 நேரம்: மு.ப. 09.30 - பி.ப 12.30

பகுதி **I** இல் சகல வினாக்களுக்கும் பகுதி **II** இலிருந்து ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை எழுதுக.

## பகுதி I

1. புனர்வாழ்வுக்கான (Rehabilitation) வரைவிலக்கணத்தை அன்றாட வாழ்க்கையிலிருந்து ஒரு உதாரணத்தை முன்வைத்து எழுதுக.
2. இயலாமை என்ற கருத்தை **இரண்டு** (02) உதாரணங்களை முன்வைத்து உங்கள் சொந்த வார்த்தைகளில் விளக்குக.
3. இயலாமை உள்ளவர்களை மேம்படுத்தும் செயற்பாட்டில் நகர்வைச் (Social mobilization) சுருக்கமாக விளக்குக.
4. **மூன்று** (03) எடுத்துக்காட்டுக்களை மேற்கோள் காட்டி தனிநபர்கள் எவ்வாறு இயலாமைக்கு ஆளாகலாம் என்பதை விளக்குக.
5. பாடசாலைகள் மற்றும் சமூகத்தில் இயலாமையின் **மூன்று** (03) தாக்கங்களைக் குறிப்பிடுக.
6. ஐக்கிய நாடுகள் சபையின் (United Nations) படி சமூதாய அடிப்படையிலான புனர்வாழ்வு (Community – Based Rehabilitation) ஐ வரைவிலக்கணப்படுத்துக.
7. இலங்கையில் இயலாமை உள்ள குழந்தைகளைப் பாதிக்கும் **ஐந்து** (05) சட்டங்களைப் பட்டியலிடுக.
8. `வாழ்வளித்தல்` (Habilitation) என்ற பதத்தைச் சுருக்கமாக விளக்குக.

**(05 x 08 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

9. அ. இயலாமையின் இரண்டு (02) முக்கிய மாதிரிகளை விளக்குக

**(05 புள்ளிகள்)**

ஆ. மருத்துவ மாதிரிக்கும் இயலாமையின் சமூக மாதிரிக்கும் இடையிலான முக்கிய வேறுபாடுகளை அவற்றின் அணுகுமுறைகளில் காணப்படும் **ஐந்து** (05) பண்புகளைப் பயன்படுத்தி ஆராய்க.

**(07 புள்ளிகள்)**

இ. இயலாமையின் சமூக மாதிரி, இயலாமைகள் உள்ள நபர்களுக்குச் சிறப்பாக உதவ சமூக மாற்றங்களை எவ்வாறு ஊக்குவிக்கிறது என்பதை மதிப்பிட்டு, இயலாமைகள் உள்ளவர்களுக்கான தடைகளைக் குறைக்க சமூகத்தை எவ்வாறு மறுசீரமைக்க முடியும் என்பதற்கான **ஐந்து** (05) எடுத்துக்காட்டுக்களை முன்வைக்குக.

**(08 புள்ளிகள்)**



47

**10.** அ. விசேட தேவைகள் உள்ள குழந்தைகளின் புனர்வாழ்வில் குடும்பம், பாடசாலை, மற்றும் சமூகத்தின் பங்கைப் பற்றி ஆராய்ந்து புனர்வாழ்வுச் செயற்பாட்டில் ஒவ்வொரு குழுவிற்றும் குறைந்தது **ஐந்து** (05) முக்கிய பொறுப்புக்களை முன்வைக்குக.

**(05 புள்ளிகள்)**

**ஆ.** 'இயலாமைகளுக்கான சமூதாய அடிப்படையிலான புனர்வாழ்வின் வெற்றி பெரும்பாலும் சமூகத்தின் தீவிர பங்கேற்பைப் பொறுத்தது'

இக்கூற்றுடன் நீங்கள் உடன்படுகின்றீர்களா? புனர்வாழ்வுச் செயன்முறையை எளிதாக்குவதில் சமூகத் தலைவர்கள், குடும்பங்கள் மற்றும் வெளிப்புற நிறுவனங்களின் பங்கைக் குறிப்பிடுவதன் மூலம் உங்கள் பதிலை நியாயப்படுத்துக.

**(07 புள்ளிகள்)**

**இ.** இயலாமைகளுக்கான எதிர்மறை மனப்பான்மைகளைக் குறைப்பதற்கும் சம வாய்ப்புக்களை உறுதி செய்வதற்கும் சமூகத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் எவ்வாறு பங்களிக்க முடியும்? உள்ளடக்கம் மற்றும் ஏற்றுக்கொள்ளலை ஊக்குவிக்கக்கூடிய சமூக நடவடிக்கைகளின் **மூன்று** (03) எடுத்துக்காட்டுக்களை முன்வைக்குக.

**(08 புள்ளிகள்)**

**11.** அ. சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வு (CBR) திட்டங்களின் முக்கிய கூறுகளைக் குறிப்பிடுக.

**(05 புள்ளிகள்)**

**ஆ.** இயலாமையுடையோருக்கு அதிகாரமளிப்பதிலும் உள்ளூர் சமூகங்களில் புனர்வாழ்வின் வெற்றியை உறுதி செய்வதிலும் சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வு திட்டங்களில் சமூக அடிப்படையிலான வாண்மையாளர்களின் பங்கை விளக்குக.

**(07 புள்ளிகள்)**

**இ.** சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வுத் திட்டத்தில் பல்துறை அணுகுமுறையின் முக்கியத்துவத்தைப் பற்றி ஆராய்ந்து சமூதாய அடிப்படையிலான புனர்வாழ்வுத் திட்டங்களின் வெற்றியை உறுதிப்படுத்த பல்துறைகள் (சுகாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு போன்றவை) எவ்வாறு ஒத்துழைக்க முடியும்?

**(08 புள்ளிகள்)**

**12.** அ. ஐக்கிய அமெரிக்கா மற்றும் இலங்கை ஆகிய இரண்டு நாடுகளிலும் இயலாமைகள் குழந்தைகளைப் பாதிக்கும் முக்கிய சட்டங்களைப் பற்றி ஆராய்க.

**(05 புள்ளிகள்)**

**ஆ.** இயலாமைகள் உள்ள குழந்தைகளின் புனர்வாழ்வில் பாடசாலைகளின் பங்கை விளக்குக. பாடசாலையிலிருந்தும் பாடசாலைக்குப் பிந்தைய சூழல்களுக்கு மாறும் போது இயலாமைகள் உள்ள மாணவர்களுக்கு உதவும் வகையில் பாடசாலைகள் எவ்வாறு திறம்பட ஒத்துழைக்கலாம்?

**(07 புள்ளிகள்)**

**இ.** இயலாமையுள்ள குழந்தைகளின் புனர்வாழ்வில் சாதாரண வகுப்பறை ஆசிரியர்களின் பங்கை மதிப்பிடுக.

**(08 புள்ளிகள்)**



50

**13.** அ. 'மனித உரிமைகள்' என்ற கருத்தையும், இந்த கருத்து மாற்றுத்திறனாளிகளுக்கு எவ்வாறு பொருந்தும் என்பதையும் விளக்குக.

**(05 புள்ளிகள்)**

**ஆ.** இயலாமைகள் உள்ளவர்களின் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் மாநாடு (UNCRPD) 2006 இன் விதிகளை பகுப்பாய்வு செய்து, **மூன்று** (03) முக்கிய உரிமைகளை எடுத்துக்காட்டுக.

**(07 புள்ளிகள்)**

**இ.** இயலாமைகள் உள்ளவர்களின் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் மாநாடு (2006) பிரிவு 24இன் படி, வாழ்நாள் முழுவதும் கற்றலின் அனைத்து நிலைகளிலும் உள்ளடக்கிய கல்வியை தேசிய கட்சிகள் உறுதி செய்யும் **ஐந்து** (05) வழிகளை விளக்குக.

**(08 புள்ளிகள்)**

**14.** அ. 1973 ஆம் ஆண்டு புனர்வாழ்வுச் சட்டத்தின் பிரிவு 504 இன் கீழ் மாணவர்கள் சேவைகளைப் பெறுவதற்கான தகுதி அளவுகோல்களை விளக்குக.

**(05 புள்ளிகள்)**

**ஆ.** இயலாமையுள்ள மாணவர்களுக்கு இடமளிப்பதற்கு பிரிவு 504 இன் கீழ் பாடசாலைகளின் பொறுப்புக்களைப் பற்றி ஆராய்க.

**(07 புள்ளிகள்)**

**இ.** இயலாமையுள்ள மாணவர்களுக்கான பிரிவு 504 செயற்பாட்டில் பெற்றோரின் பங்கை பகுப்பாய்வு செய்க.

**(08 புள்ளிகள்)**

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -